கம்பம் நகராட்சி

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (இரு உறை)

ந.க.எண்.2033/2026/இ1   நாள்.06.11.2026

கம்பம் நகராட்சி ஆணையாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் **முதலமைச்சரின் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித்திட்டம் 2026–27–ன்** கீழ் மேற்கொள்ளப்படும் பணிக்கு கீழ்காணும் நாளில் மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை **http://tntenders.gov.in** என்ற இணையதளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். **ஒரு சதவீதம் வைப்புத் தொகை ஒப்பந்தப்புள்ளியுடன் செலுத்தப்பட வேண்டும்.** மேலும் கூடுதல் விவரங்களை கம்பம் நகராட்சி பொறியியல் பிரிவில் நேரில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளி நேரம் மற்றும் நாள்

1. ஒப்பந்தப்புள்ளி படிவம் பதிவிறக்கம் செய்யும் விபரம் : **13.11.2026** முற்பகல் **10.00** மணி முதல்
2. முன் கலந்தாய்வுக்கூட்டம் நாள் : **26.11.2026** காலை **11.00** மணி
3. ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்து கொள்ள கடைசி நாள் : **15.12.2026** மாலை **3.00** மணி வரை
4. ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் : **15.12.2026** மாலை **3.00** மணி வரை
5. ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **15.12.2026** மாலை **3.30** மணி

வ. எண்	வேலையின் பெயர்	மதிப்பீட்டு தொகை ரூ. (கோடியில்)	வைப்புத் தொகை ரூ.	பணி முடிக்க வேண்டிய காலம்
முதலமைச்சரின் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித்திட்டம் 2026–27				
1	கம்பம் நகராட்சியில் ஏற்கனவே உள்ள குடிநீர் விநியோக அமைப்பை மேம்படுத்தும் பணி.	42,19,00,000/–	42,19,000/–	24 மாதங்கள்

செ.ம.தொ.இ/ 3457 /ஒப்பந்தப்புள்ளி/2026   **ஆணையாளர், கம்பம் நகராட்சி**

THE TAMIL NADU HANDICRAFTS DEVELOPMENT CORPORATION LTD
(A Government of Tamil Nadu Undertaking)
Registered Office: 759, Anna Salai, Chennai-600 002. Phone: 044-28521271/28521325

CRAFT ENTREPRENEURSHIP DEVELOPMENT PROGRAMME (CEDP) – 2026–27
APPLICATIONS INVITED FROM INTERESTED YOUNG CRAFT ASPIRING ENTREPRENEURS

Rc.No.: TNHDC/0725/DC/26-27   Dated:07.11.2026

TNHDC (Poompuhar) invites applications from eligible youth aged **21–30 years** for a **6-months Training Programme** to develop entrepreneurial skills in the handicrafts sector.

Last date for submission of application along with supporting documents on or before **17.11.2026.**

For further details please visit: **www.poompuhar.com/tnhdc**

DIPR/959/DIS/2026   **Managing Director**

தன்தேரஸ் திருநாள்: பிரதமர் மோடி வாழ்த்து

புது தில்லி, நவ. 6: தீபாவளி கொண்டாட்டங்களையொட்டிய தன்தேரஸ் திருநாளையொட்டி, நாட்டு மக்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி வெள்ளிக்கிழமை வாழ்த்து தெரிவித்தார்.

வட இந்தியாவில் தீபாவளி பண்டிகை 5 நாள்கள் கொண்டாடப்படுகிறது. தன்தேரஸுடன் தொடங்கும் இக்கொண்டாட்டங்கள், அடுத்தடுத்த நாள்களில் நரக சதுர்த்தசி, தீபாவளி, கோவர்தன் பூஜை, பாய் தூஜ் என்ற பெயரில் நடைபெறும்.

தன திரயோதசி எனப்படும் தன்தேரஸ் திருநாள், செல்வத்தின் கடவுள் லட்சுமியை வரவேற்பதாகும். மருத்துவக் கடவுளான பகவான் தன்வந்தரி ஜெயந்தியையும் இந்த நாள் குறிக்கிறது.

தன்தேரஸ் வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்ட நிலையில், நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்து, பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் பதிவில் கூறியிருப்பதாவது: தன்தேரஸ் திருநாளில் நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது எல்லையற்ற வாழ்த்துகள். பகவான் தன்வந்தரியின் தெய்வீக அருளால் மகிழ்ச்சி, அமைதி, நல்ல ஆரோக்கியத்துடன் ஒவ்வொருவரின் வாழ்வும் எப்போதும் ஒளிரட்டும்.

உடல் நலனுக்கு உகந்த உணவுகளை உண்பது, தவறாமல் யோகா பயிற்சி மேற்கொள்வது, போதுமான தூக்கம், சரியான நேரங்களில் மருத்துவப் பரிசோதனை மேற்கொள்வது போன்ற ஆரோக்கியமான பழக்கவழக்கங்களை அனைத்து குடும்பங்களும் கடைப்பிடிக்க வேண்டும் என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

HDB FINANCIAL SERVICES

HDB ஃபைனான்ஸியல் சர்வீசஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம் - ராதிகா, 2 வது தளம், லா கார்டன், நவ்ரங்புரா, அஹமதாபாத் - 09
கிளை அலுவலகம் - HDB ஃபைனான்ஸியல் சர்வீசஸ் லிமிடெட்., ஆசிர் காம்ப்ளக்ஸ், 2 வது தளம், HDFC வங்கி மேல் தளம், திருச்செந்தூர் சாலை, சமாதானபுரம் - 627 002

மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

(கடன்தாரர் / கூட்டு - விண்ணப்பதாரர் / பொது மக்களுக்கு) (சர்ஃபாசி சட்டம்' 2002 ன் விதி 8(6) - உடன் படிக்க - விதி 9(1) ன் கீழ்)

இதன் கீழ்க்கையொப்பமிட்ட **HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்** - ன் அதிகாரப்பூர்வ அலுவலர், பிணைக்காப்பு (அமலாக்கம்) சட்டம் 2002 ன் கீழ் இதன் கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன் கணக்குக்காக பின்வரும் சொத்தை **"இருக்கின்ற இடத்தில்" & "இருக்கின்ற நிலையில்"** என்ற அடிப்படையில் விற்கும் உரிமையுடன் சுவாதீனம் எடுத்துள்ளார்.

விண்ணப்பதாரர் & கூட்டு விண்ணப்பதாரர் பெயர் மற்றும் முகவரி - 1) தாலிது ஸ்டோர்ஸ், எண்: 11/25ஏ, அண்ணா நகர், 4 வது தெரு, ஆலங்குளம், ஆலங்குளம் - 627851, தமிழ்நாடு, **மேலும் :** எண். 11/45(ஏ) 4 வது தெரு, அண்ணா நகர், ஆலங்குளம், ஆலங்குளம் - 627851, **மேலும் :** சர்வே எண். 387/1, பழைய சர்வே எண். 387/1c, புதிய சர்வே எண். 387/1c12, வார்டு எண். 11, ப்ளாட் எண். 43&42, க எண். 11/45ஏ, அண்ணா நகர், 4 வது தெரு, ஆலங்குளம் கிராமம், ஆலங்குளம் - 627851, **2)** விஜயா T, கதவு எண். 11/45 (ஏ) 4 வது தெரு, அண்ணா நகர், ஆலங்குளம், ஆலங்குளம் - 627851, **3)** தாலிது A, கதவு எண். 11/45(ஏ) 4 வது தெரு, அண்ணா நகர், ஆலங்குளம், ஆலங்குளம் - 627851. **4)** ஜான் போஸ்ஸ், எண். 45B, 2 வது தெரு, முருகன் கோவில் 1 வது தெரு, 1 வது சந்து, ஆலங்குளம், திருநெல்வேலி, ஆலங்குளம் - 627851 தமிழ்நாடு. **5)** தாலிது A, எண். 45B, 2 வது தெரு, முருகன் கோவில் 1 வது தெரு, 1 வது சந்து, ஆலங்குளம், திருநெல்வேலி, ஆலங்குளம் - 627851 தமிழ்நாடு. **6)** விஜயா A, எண். 45B, 2 வது தெரு, முருகன் கோவில் 1 வது தெரு, 1 வது சந்து, ஆலங்குளம், திருநெல்வேலி, ஆலங்குளம் - 627851 தமிழ்நாடு. **கடன் கணக்கு எண்கள் - 22280134 & 53084481;** மொத்த நிலுவைத்தொகை : **கடன் கணக்கு எண்.22280134** க்கான நிலுவைத்தொகை - **ரூ.31,52,898.49/- (ரூபாய் முப்பத்து ஒரு இலட்சத்து ஐம்பத்து இரண்டாயிரத்து எட்டூறு தொண்ணூற்று எட்டு மற்றும் பைசா நாற்பத்து ஒன்பது மட்டும்)** மற்றும் **கடன் கணக்கு எண்.53084481** க்கான நிலுவைத்தொகை - **ரூ.14,32,963.63/- (ரூபாய் பதினான்கு இலட்சத்து முப்பத்து இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து மூன்று மற்றும் பைசா அறுபத்து மூன்று மட்டும்)** என 04.11.2026 ம் தேதியின் படி இரண்டு கடன் கணக்குகளுக்கும் சேர்த்து மொத்த நிலுவைத்தொகை **ரூ.45,85,861.12/- (ரூபாய் நாற்பத்து ஐந்து இலட்சத்து எண்பத்து ஐந்தாயிரத்து எட்டூற்று அறுபத்து ஒன்று மற்றும் பைசா பன்னிரண்டு மட்டும்)** மற்றும் முழு தொகையையும் செலுத்தும் வரை மேற்கொண்டு வரும் வட்டி / இதர செலவுகள் / செலவுகள் ஆகியன.

ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு தெரிந்த (ஏதேனும் இருப்பின்) வில்லங்கங்களின் விபரங்கள் - இல்லை

அசையா சொத்துக்களின் விபரங்கள் - ஜாமீன் சொத்து 1 - தென்காசி பதிவு மாவட்டம், ஆலங்குளம் சார்பதிவு அலுவலகம், ஆலங்குளம் கிராமம், அயன் புஞ்சை சர்வே எண். 387/1 ல் உள்ள 2.27 ஏக்கர், தற்போது சர்வே எண். 387/1G என உட்பிரிவு செய்யப்பட்டு 0.57.5 ஹெக் மற்றும் நத்தம் நில வரித்திட்டம் சர்வே எண். 387/1c12 ல் உள்ள 0.02.65 ஹெக்டேரில் உள்ள, ப்ளாட் எண். 42 ன் அளவீடுகளாவன - கிழமேல் வடக்கு 28.38 அடி, தெற்கு 27.72 அடி, தென்வடல் மேற்கு 29.70 அடி, கிழக்கு 29.70 அடி, என மொத்தம் 83.085 சதுர அடி ஆலங்குளம் தென்காசி சாலை, 4 வது தெரு, அண்ணா நகர், ஆலங்குளம் டவுன் பஞ்சாயத்து, வார்டு எண். 11 ல் உள்ள கதவு எண். 45B உடன் கட்டப்பட்ட குடியிருப்பு கட்டிடம் உள்ளிட்ட சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். **இதன் எல்லைகளாவன பின்வருமாறு - வடக்கு** - கிழமேல் பொது தெரு, **கிழக்கு** - பாக்கியநாதன் மனை, **தெற்கு** - செல்லையா மனை, **மேற்கு** - ராமையா வீடு.

ஜாமீன் சொத்து 2 - தென்காசி பதிவு மாவட்டம், ஆலங்குளம் சார்பதிவு அலுவலகம், ஆலங்குளம் கிராமம், அயன் புஞ்சை சர்வே எண். 387/1 ல் உள்ள 2.27 ஏக்கர், தற்போது சர்வே எண். 387/1G என உட்பிரிவு செய்யப்பட்டு 0.57.5 ஹெக் மற்றும் நத்தம் நில வரித்திட்டம் சர்வே எண். 387/1c12 ல் உள்ள 0.02.65 ஹெக்டேரில் உள்ள ப்ளாட் எண். 43 ன் அளவீடுகளாவன - கிழமேல் வடக்கு 28.38 அடி, தெற்கு 27.72 அடி, தென்வடல் மேற்கு 29.70 அடி, கிழக்கு 29.70 அடி, என மொத்தம் 83.09 சதுர அடி அதாவது 77.395 சதுர மீட்டர் பரப்புடன் ஆலங்குளம் தென்காசி சாலை, 4 வது தெரு, அண்ணா நகர், ஆலங்குளம் டவுன் பஞ்சாயத்து, வார்டு எண். 11 ல் உள்ள சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். **இதன் எல்லைகளாவன பின்வருமாறு - வடக்கு** - கிழமேல் பொது பாதை, **கிழக்கு** - ரமேஷ் மனை, **தெற்கு** - ராமதுரை மனை, **மேற்கு** - தாலிது வீடு.

அடிப்படை விலை	டேவணித்தொகை	விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை	டேவணித்தொகை செலுத்த கடைசி தேதி & நேரம்	ஏல தேதி & நேரம்
ரூ.65,83,725/-	ரூ.6,58,373/-	ரூ.1,00,000/-	09.12.2026 மாலை 06.00 மணி வரை	10.12.2026 காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை

விலைப்புள்ளி மற்றும் ஏல விற்பனைக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகள் :-

(1). ஏல விற்பனையானது வலைதளம் **https://www.bankeauctions.com** மூலம் "Online e-auction" வாயிலாக இதன் மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தேதிகளில் எண்ணிலடங்கா 5 நிமிட கால நீட்டிப்புடன் நடத்தப்படும். **2).** விருப்பமுள்ள ஏலதாரர்கள் தங்களது டேவணித்தொகையை வலைதளம் : **https://www.bankeauctions.com** மூலம் பயனாளர் அடையாளம் மற்றும் கடவுச்சொல் வாயிலாக சமர்ப்பிக்க வேண்டும். (பயனாளர் அடையாளம் மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை தங்களது பெயரை வலைதளம் **https://www.bankeauctions.com** ல் பதிவு செய்து இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்). அடிப்படை விலையின் 10% தொகையை டேவணித்தொகையாக பேஆர்டர் மூலம் **"HDB Financial Services Limited"** என்ற பெயருக்கு எடுக்கப்பட்ட கேட்பு வரைவோலை மூலம் செலுத்த வேண்டும். ஏலதாரரால் வலைதளத்தில் தம்மை பதிவு (ஒரு முறை) செய்த பிறகு, விருப்பமுள்ள ஏலதார் / வாங்குபவர் பின்வரும் ஆவணங்களின் நகல்களை, விலைப்புள்ளி ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி மற்றும் நேரத்துக்கு முன்பு வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். அவையாவன - **i).** NEFT/ RTGS சலான் அல்லது கேட்பு வரைவோலை நகல் **ii).** பிரதம கணக்கு அட்டை **iii).** அடையாள சான்று / முகவரி சான்று (KYC) அதாவது வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுனர் உரிமம் / கடவுச்சீட்டு போன்றவை இவையன்றி வரும் விலைப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும். முறையாக நிரப்பப்பட்டு, கையொப்பமிட்ட பிற்சேர்க்கை II & III ஆகியவற்றின் ஒளிவருடப்பட்டு பதிவேற்றம் செய்யப்படும் நகல்களை வலைதளம் **https://www.bankeauctions.com** லிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். உள்நுழை அடையாளம் மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை உருவாக்குவதிலோ, தகவல்களை பதிவேற்றம் செய்வதிலோ விலைப்புள்ளி ஆவணங்களை சமர்ப்பிப்பதிலோ, பயிற்சி / ஆன்லைன் உள்ளிருக்கை விலைகோரலுக்கான செய்முறை விளக்கம் பெறுவதிலோ உதவி தேவைப்படும் விருப்பமுள்ள ஏலதாரர்கள், **M/s. C1 India Pvt Ltd., உத்யோக் விஹார், ஃபேஸ் 2, கல்ஃப் பெட்ரோகெம் பில்டிங், எண்.301, குர்காவ்ன், ஹரியானா - 122 015 மின்னஞ்சல் முகவரி : support@bankeauctions.com உதவிக்கான எண்கள் - 124 4302020/21/22/23, 7291981124 / 1125 / 1126, விற்பனை விசாரணைகளுக்கு - sales@bankeauctions.com , 7291981129. 3).** ஏலத்திற்கு விருப்பமுள்ள ஏலதாரர்கள் நேரில் ஆஜராகி, முறையே பங்கேற்று, எழுத்து பூர்வமாக அவர் தனக்காக விலைகோருகிறார் என எழுத்து பூர்வமாக அறிவிக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட நபர் எவரும் அனுமதிக்கப்படுவதில்லை. **4).** விருப்பமுள்ள ஏலதாரர்கள், மேலாளர், **HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்,** ஆசிர் காம்ப்ளக்ஸ், 2 வது தளம், HDFC வங்கி மேல் தளம், திருச்செந்தூர் சாலை, சமாதானபுரம் - 627 002 அவர்களிடமிருந்து விலைப்புள்ளி படிவங்களை பெற்றுக்கொள்ளலாம். **5).** விருப்பமுள்ள ஏலதாரர்கள் தங்களது விலைப்புள்ளிகளை பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் அடிப்படைவிலையில் 10% தொகையை டேவணித்தொகைக்காக "HDB Financial Service Limited" என்ற பெயருக்கு எடுக்கப்பட்ட பே ஆர்டர் / கேட்பு வரைவோலையுடன் சேர்த்து மூடிய உறையிலிட்டு, அதிகாரப்பூர்வ அலுவலர், HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட், என்ற முகவரியில் **09.12.2026** அன்று மாலை **06.00** மணி அல்லது அதற்கு முன்பு சமர்ப்பிக்க வேண்டும். **6).** சொத்து மற்றும் இதர விபரங்களை ஆய்வு செய்ய, வாங்க விருப்பமுள்ள நபர்கள், **HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட், ஆசிர் காம்ப்ளக்ஸ், 2 வது தளம், HDFC வங்கி மேல் தளம், திருச்செந்தூர் சாலை, சமாதானபுரம் - 627 002 - திரு A. ரஞ்சித் குமார் (99943 75863) & திரு ராஜசேகர் (98941 43049) ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். சொத்துக்கள் "இருக்கின்ற இடத்தில்" மற்றும் "இருக்கின்ற நிலையில்"** என்ற அடிப்படையில் விற்கப்படுகின்றன. **7).** முத்திரையிட்ட விலைப்புள்ளிகள், விருப்பமுள்ள ஏலதாரர்கள் முன்னிலையில், இதுடன் அறிவிக்கப்பட்ட விலைப்புள்ளி மற்றும் ஏல விற்பனை தேதியான **10.12.2026** அன்று காலை **11.00** மணி மணிக்கு திறக்கப்படும். பொதுவாக விற்பனையானது மூடிய விலைப்புள்ளிகளின் வாயிலாக நடைபெறும் போதிலும், அதிகாரப்பூர்வ அலுவலர், தனது சொந்த அதிகாரத்தின் பேரில், மூடிய விலைப்புள்ளிகளை சமர்ப்பித்தோர் விலைப்புள்ளியை விட அதிகமாக விலை கோர விரைவும், விருப்பமுள்ள ஏலதாரர்கள் மத்தியில் திறந்த வெளி ஏலம் நடத்தலாம். அவ்வாறு நடைபெறும் போது, விற்பனை அதிகபட்ச விலைகோருபவர்க்கே உறுதிப்படுத்தப்படும். எனினும், விற்பனை **HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்** - ன் உறுதிப்படுத்தலுக்கு கட்டுப்பட்டதாகும். **8).** வெற்றி பெற்ற ஏலதாரர், விற்பனை உறுதிப்படுத்தப்பட்டதன் பேரில், விற்பனை தொகையின் 25% யை (டேவணித்தொகை உட்பட) உடனடியாக அதே நாளில் அல்லது அடுத்த வேலை நாளுக்கு மிகாமல் செலுத்த வேண்டும். மீதி 75% தொகையை விற்பனை உறுதிப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். தவறும் பட்சத்தில், தொடக்கத்தில் செலுத்திய 25% தொகை அபராதமாக கருதி கழிக்கப்படும். எக்காரணத்தைக்கொண்டும் அத்தொகை திருப்பி தரப்பட மாட்டாது. வெற்றி பெற்ற ஏலதாரர், மேற்சொன்னவாறு, மொத்த ஏலத்தொகையில் 25% செலுத்த தவறும் பட்சத்தில், அடுத்த வெற்றி பெற்ற ஏலதாரர் பரிசீலிக்கப்படுவதோடு, அவர் விற்பனையை முடிக்க உரிமையுடையவராவார். **9).** விற்பனைச்சான்று, அதிகாரப்பூர்வ அலுவலரின் பெயரில் மட்டுமே, விற்பனைத்தொகையை, இதில் குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவுக்குள், முழுமையாக பெறப்பட்ட பிறகே வழங்கப்படும். **10).** வாங்குதலின் வெற்றி பெற்றவரே பரிமாற்றத்துக்கு சட்டப்படி பொருந்தக்கூடியவாறு, செலுத்தப்பட வேண்டிய முத்திரை நிலை, பதிவு கட்டணம் போன்ற கட்டணங்கள் / செலவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் (சட்டப்படியிலான வீட்டு வரி, மின் கட்டணங்கள் மற்றும் இதர நிலுவைகள்; TDS, GST போன்றவற்றை ஏதேனும் அரசுக்கோ அரசு நிறுவனத்துக்கோ உள்ளாட்சி அமைப்புகளுக்கோ செலுத்த வேண்டியிருப்பின் அவற்றை வெற்றி பெற்ற ஏலதாரர் செலுத்த வேண்டும். **11).** சட்ட ரீதியில் செலுத்த வேண்டிய (சட்டப்படியிலான வீட்டு வரி, மின் கட்டணங்கள் மற்றும் இதர நிலுவைகள்) ... **12).** அதிகாரப்பூர்வ அலுவலர், எக்காரணமும் கூறாமல், விலைப்புள்ளி அல்லது ஏலப்புள்ளிகளில் ஏதேனும் அல்லது அனைத்தையும் ஏற்றுக்கொள்ள அல்லது ரத்து செய்யவும், ஏலத்தை ஒத்தி வைக்க / தள்ளி வைக்க / ரத்து செய்யவும், எக்காரணமும் கூறாமல், விற்பனைக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றவும், எந்த முன் அறிவிப்புமின்றி, விற்பனைக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றவும் உள்ள அதிகாரத்தை தன்னகத்தே வைத்துள்ளார்.

இடம் : திருநெல்வேலி, தேதி : 06.11.2026   ஒப்பம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், M/s. HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்.

ஞானேஷ் குமார் மீதான ஊழல் குற்றச்சாட்டு: கேரளத்தில் சிறப்பு புலனாய்வுக் குழு அமைப்பு

திருவனந்தபுரம், நவ.6: இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் மீதான ஊழல் குற்றச்சாட்டை விசாரிக்க சிறப்பு புலனாய்வுக் குழுவை கேரள லஞ்ச ஒழிப்புத் துறை அமைத்தது.

20 ஆண்டுகளுக்கு முன் கேரள பொதுப் பணித் துறைச் செயலராக ஞானேஷ் குமார் பணியாற்றியபோது சாலை அமைக்கும் பணிகள் முழுமையாக நிறைவடைந்த பிறகும் அதற்கான நிதியை விடுவிக்க தன்னிடம் ரூ.2 கோடி லஞ்சம் கோரியதாக ஒப்பந்ததாரர் சாஜன் அளித்த புகாரின் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக கேரள லஞ்ச ஒழிப்புத் துறை இயக்குநர் மனோஜ் ஆபிரகாம் கடந்த வியாழக்கிழமை பிறப்பித்த உத்தரவில், 'ஞானேஷ் குமார் மீதான ஊழல் குற்றச்சாட்டை விசாரிக்க சிறப்பு புலனாய்வுக் குழு அமைக்கப்படுகிறது. அவர் மீதான புகார்களை முழுமையாக ஆய்வு செய்து விரைந்து அறிக்கை சமர்ப்பிக்க இந்தக் குழுவுக்கு உத்தரவிடப்படுகிறது. விசாரணை அவகாசத்தை நீட்டிப்பதற்கான தேவை எழுந்தால் அதற்கு லஞ்ச ஒழிப்புத் துறை இயக்குநரிடம் முன் அனுமதி பெற வேண்டியது அவசியம்' எனத் தெரிவிக்கப்பட்டது.

இரு புகார்கள்: கடந்த 2006–இல் ஞானேஷ் குமார் கேரள பொதுப் பணித் துறைச் செயலராகப் பதவி வகித்தபோது, மாநில போக்குவரத்துத் திட்டத்தின்கீழ் (கேஎஸ்டிபி) உலக வங்கி நிதியுதவியுடன் அங்கமாலி–திருவனந்தபுரம் இடையே ரூ.215 கோடி மதிப்பீட்டில் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

'பிஏடிஐ' எனும் மலேசிய நிறுவனம் மற்றும் பகிரதா பொறியியல் நிறுவனம் ஆகியவை கூட்டாக இந்தப் பணிகளை மேற்கொண்டன.

இதில் மலேசிய நிறுவன திட்டப் பொறியாளர் லீ சீ பீன், கட்டுமானப் பணிகள் குறித்து பல்வேறு குற்றச்சாட்டுகளை எழுப்பினார்.

பின்னர், மலேசியா திரும்பிய அவர் தற்கொலை செய்துகொண்டார். அவர் எழுதிய கடிதங்களில் ஞானேஷ் குமார் பெயரை குறிப்பிடப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இது தொடர்பாக கேரள காங்கிரஸ் மூத்த தலைவர் எம்.வேணுகோபால் அளித்த புகாரின் அடிப்படையில் ஞானேஷ் குமாருக்கு எதிராக விசாரணையைத் தொடங்க லஞ்ச ஒழிப்புத் துறைக்கு மாநில உள்துறை அமைச்சர் ரமேஷ் சென்னிதலா கடந்த அக்.4–ஆம் தேதி உத்தரவிட்டார்.

இந்நிலையில், பொறியாளர்கள் ஒப்புதல் அளித்த பிறகும் ரூ.17 கோடி மதிப்பில் நிறைவடைந்த பணிகளுக்கு நிதியை விடுவிக்காமல் தன்னிடம் ரூ.2 கோடி லஞ்சம் கேட்டதாக கொல்லம் மாவட்டத்தைச் சேர்ந்த சாஜன் மற்றொரு புகாரை அளித்தார்.

மேலும், நிதி விடுவிப்பில் ஏற்பட்ட தாமதத்தால் பிஏடிஐ நிறுவனம் மற்றும் அதன் ஒப்பந்ததாரர்கள், பணியாளர்களுக்கு நிதிச் சுமை ஏற்பட்டதாகவும் சாஜன் தனது மனுவில் குறிப்பிட்டார்.

CHANGE OF NAME

My son **JOHN CHRISHVIN XAVIER BLESIDES VINOSH** born on 27/04/2010 (Native district: Tuticorin) Residing at No: 52, Peria Kadai Street, Tuticorin - 628001, TamilNadu shall henceforth be known as **JOHN CHRISHVIN.V**

XAVIER BLESIDES VINOSH
(FATHER)

தன்தேரஸ் தினம்...



தன்தேரஸ் என்னும் தனதிரயோதசி தினமான வெள்ளிக்கிழமை பஞ்சாப் மாநிலம் அமிருதசரஸில் நகை வாங்க வந்த பெண்கள். செல்வம், ஆரோக்கியம் பெருகுவதைக் குறிக்கும் தனதிரயோதசி தினத்தில் இல்லங்களுக்குப் புதிய பொருள்கள், தங்க நகை வாங்குவதை வட இந்தியாவில் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

பஞ்சாப் நேஷனல் வங்கி / punjab national bank

SASTRA சென்டர் - வட்டார அலுவலகம் திருச்சி, PNB ஹவுஸ், திருச்சி - தஞ்சாவூர் சாலை, கைலாசபுரம், திருச்சி - 620014. தொ. பே. : 0431-252765, மொபைல் எண் : 9442550086 மின்னஞ்சல் ஐடி: cs8327@pnb.co.in

சொத்து மீட்பு மேலாண்மை கிளை (ARMB)

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 விதி எண்.8 (6)-ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின் ஏல அறிவிப்பு

பஞ்சாப் நேஷனல் வங்கியில் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை பஞ்சாப் நேஷனல் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஆக்கப்பூர்வ/ அடையாளபூர்வ/ மெய்நிலை சுவாதீனத்தில் எடுக்கப்பட்டு கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்களிடமிருந்து பெற வேண்டிய கீழே குறிப்பிட்டுள்ள கடன் தொகை மற்றும் அதற்கான வட்டி இதர செலவுகளையும் வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் மின் ஏல விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் பொதுமக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கும் அறிவிக்கப் படுகிறது. சொத்துக்களின் குறைந்தபட்ச கேட்பு விலை மற்றும் டேவணித் தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கிளையின் பெயர்: மதுரை மெயின் (438300)

கணக்கின் பெயர்	1.அஜெய் கபுயல்ஸ் 2.அஜெய் மாடர்ன் ரைஸ் மில் 3.அன்னத்தாய் ரைஸ் அண்ட் பேடி டிரேடர்ஸ்

கடன்தாரர்/ஜாமீன்தாரர் கணக்கின் பெயர் மற்றும் முகவரி :

1.கடன்தாரர் : M/s.அஜெய் கபுயல்ஸ், உரிமையாளர் : திருமதி.P.சுகன்யா, பழைய எண்.87-D, ஆசாத் ரோடு, வலுவுபுரம், காந்தி நகர் போஸ்ட், திருநெல்வேலி - 627006.

2.கடன்தாரர் : M / s. அஜெய் கபுயல்ஸ், உரிமையாளர் : திருமதி.P. சுகன்யா, T.S எண்.2586/48 2, தென்காசி ரோடு, வலுவுபுரம், காந்தி நகர், திருநெல்வேலி - 627006.

3.பிணையதாரர் (அஜெய் கபுயல்ஸ், அஜெய் மாடர்ன் ரைஸ் மில் & அன்னத்தாய் ரைஸ் அண்ட் பேடி டிரேடர்ஸ்) : திரு.S.ரவிச்சந்திரன், த/பெ.திரு.S.K.சுப்பையா, பழைய எண்.87-D, ஆசாத் ரோடு, வலுவுபுரம், காந்தி நகர் போஸ்ட், திருநெல்வேலி - 627006.

4.பிணையதாரர் (அஜெய் கபுயல்ஸ், அஜெய் மாடர்ன் ரைஸ் மில் & அன்னத்தாய் ரைஸ் அண்ட் பேடி டிரேடர்ஸ்) : திரு.S.K.சுப்பையா, த/பெ.சின்ன கருப்பன், பழைய எண்.87-D, ஆசாத் ரோடு, வலுவுபுரம், காந்தி நகர் போஸ்ட், திருநெல்வேலி - 627006.

5.கடன்தாரர் : M/s.அஜெய் மாடர்ன் ரைஸ் மில், உரிமையாளர் : ஸ்ரீ.R.அஜெய், 101/2, புதூர் கிராமம், தென்காசி ரோடு, புதூர் கிராமம், திருநெல்வேலி - 627851.

6.கடன்தாரர் : M/s.அன்னத்தாய் ரைஸ் அண்ட் பேடி டிரேடர்ஸ், உரிமையாளர் திரு.S.K.சுப்பையா, எண்.34, வலுவுபுரம், கீழ் தெரு, காந்தி நகர் போஸ்ட், திருநெல்வேலி டவுன் - 627008.

7.பிணையதாரர் (M/s.அன்னத்தாய் ரைஸ் அண்ட் பேடி டிரேடர்ஸ்) : ஸ்ரீ.R.அஜெய், பழைய எண்.87-D, ஆசாத் ரோடு, வலுவுபுரம், காந்தி நகர் போஸ்ட், திருநெல்வேலி - 627006.

அடமானம் வைக்கப்பட்ட அசையா சொத்துக்களின் விவரம் / உரிமையாளர்களின் பெயர் (சொத்துக்களின் அடமானதாரர்) ஐட்டம் எண்.1 - திரு.S.ரவிச்சந்திரன் அவர்களுக்கு சொந்தமான அசையா சொத்து

அ) திருநெல்வேலி பதிவு மாவட்டம், திருநெல்வேலி இணை எண்.2 சார்பதிவாளர் சரகம், திருநெல்வேலி டவுன், ஆசாத் ரோடு @ குற்றாலம் ரோடு, வடபகுதியில் T.S. வார்டு 9, பிளாக் 16, T.S.எண்.2590/2 - ல் 82 சென்டில் (அஜீரா ஹக் - க்கு விற்கப்பட்ட 16 சென்ட்) 18.35 சென்ட் பரப்பளவு கீழ் மேல் வடபுறம் 56 அடி, தென்புறம் 60 அடி, தென் வடல் மேல்புறம் 37 அடி, கீழ்புறம் 27 அடி ஆக மொத்தம் 1792 சதுர அடி (166.60 சதுர மீட்டர்) - 4.11 சென்ட் பரப்பளவு காலி மனை மற்றும் மற்ற உரிமைகள் உட்பட **நான்கு எல்லைகள் : வடக்கில் :** T.S.எண்.2589/1C மற்றும் 29 பகுதி நிலம், **கிழக்கில் :** T.S.எண்.2590/2 நிலம், **தெற்கில் :** T.S.எண்.2590/2.S.ரவிச்சந்திரன் நிலம், **மேற்கில் :** T.S.எண்.2590/2 பகுதி நிலம். **ஆ)** திருநெல்வேலி பதிவு மாவட்டம், திருநெல்வேலி இணை எண்.2 சார் பதிவாளர் சரகம், திருநெல்வேலி டவுன், ஆசாத் ரோடு @ குற்றாலம் ரோடு, வடபகுதியில் T.S. வார்டு 9, பிளாக் 16, T.S.எண்.2590/2 பகுதி நிலத்தில் (ஐட்டம் 2) - ல் கீழ் மேல் வடபுறம் 71 அடி + 69 அடி + 140 அடி, தென்புறம் 14 அடி, தென் வடல் மேல்புறம் 42 அடி, கீழ்புறம் 40 அடி ஆக மொத்தம் 6204 சதுரடி (576.79 சதுர மீட்டர்) 14.24 சென்ட் பரப்பளவு நிலம் **நான்கு எல்லைகள் : வடக்கில் :** T.S.எண்.2589/28 மற்றும் R.S.எண்.134/1 பகுதி, **கிழக்கில் :** T.S.எண்.2590/3 பகுதி நிலம், **தெற்கில் :** T.S.எண்.2590/2 பகுதி ஜெயலட்சுமி நிலம், **மேற்கில் :** ஐட்டம் 1 மற்றும் ரவிச்சந்திரன் நிலம் & T.S.எண்.2590/2 பகுதி நிலம். மேலே சொல்லப்பட்ட ஐட்டம் 1 & 2 - ன் மொத்த பரப்பளவு 7996 சதுரடி (743.39 சதுர மீட்டர்) - 18.35 சென்ட் முழுவதும் மற்றும் பொது உரிமைகள் உட்பட இந்த சொத்தானது திருநெல்வேலி மாநகராட்சி எல்லைக்கு உட்பட்டது.

ஐட்டம் எண்.2 - திரு.S.ரவிச்சந்திரன் அவர்களுக்கு சொந்தமான அசையா சொத்து

திருநெல்வேலி பதிவு மாவட்டம், திருநெல்வேலி இணை எண்.2 சார் பதிவாளர் சரகம், திருநெல்வேலி தாலுக்கா, கண்டியபேரி கிராமம், நஞ்சை S.எண்.110/1, இதற்கு உட்பட்ட 2 ஏக்கர் 27 சென்ட் மற்றும் 68 சென்ட், T.S. வார்டு 9, பிளாக் 16, T.S.எண்.2586(4) - ல் மொத்தம் 68 சென்ட் நிலத்தில் தெற்கு பகுதியில் அமைந்துள்ள 34 சென்ட் நிலம் இதில் கீழ்பகுதி முதல் மேல் பகுதி வரை நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டு 16 சென்ட் (6969.6 சதுரடி) (647.49 சதுர மீட்டர்) பரப்பளவு காலி நிலம் மற்றும் இதனுடன் பொது உரிமைகள் உட்பட **நான்கு எல்லைகள் : வடக்கில் :** T.S.எண்.2586/3 ரவிச்சந்திரன் நஞ்சை நிலம் மற்றும் T.S.எண்.2586/4 ரவிச்சந்திரன் நஞ்சை நிலம், **கிழக்கில் :** ரவிச்சந்திரன் அவர்களின் 6 சென்ட் காலி மனை, T.S.எண்.2586/4, **தெற்கில் :** கீழ்மேல் கால்வாய் மற்றும் ரோடு, T.S.எண்.2586/4 நிலம், **மேற்கில் :** அன்னதான சுட்டளை நஞ்சைக்கு சொந்தமான T.S.எண்.2585. இந்த சொத்தானது திருநெல்வேலி மாநகராட்சி எல்லைக்கு உட்பட்டது.

ஐட்டம் எண்.3 - திரு.S.ரவிச்சந்திரன் அவர்களுக்கு சொந்தமான அசையா சொத்து

திருநெல்வேலி பதிவு மாவட்டம், திருநெல்வேலி இணை 2 சார் பதிவாளர் சரகம், திருநெல்வேலி மாநகராட்சி வார்டு 51, திருநெல்வேலி 8, குற்றாலம் ரோடு, T.S.எண்.9, பிளாக் 16, T.S.எண்.2586/4, 6 சென்ட் பரப்பளவு காலி மனை **நான்கு எல்லைகள் : வடக்கில் :** S. ரவிச்சந்திரன் அவர்களுக்கு சொந்தமான காலி மனை, **கிழக்கில் :** S.K. சுப்பையா அவர்களுக்கு சொந்தமான காலி மனை, **தெற்கில் :** குற்றாலம் ரோடு, **மேற்கில் :** S. ரவிச்சந்திரன் அவர்களுக்கு சொந்தமான காலி மனை, அளவீடு : கீழ் மேல் வடபுறம் 39 அடி, தென்புறம் 39 அடி, தென் வடல் கீழ்புறம் 56 அடி, மேல்புறம் 70 அடி ஆக மொத்தம் 2652 சதுர அடி பரப்பளவு காலி மனை மற்றும் பொது உரிமைகள் உட்பட.

ஐட்டம் எண்.4 - திரு.S.K.சுப்பையா அவர்களுக்கு சொந்தமான அசையா சொத்து

திருநெல்வேலி பதிவு மாவட்டம், திருநெல்வேலி இணை எண்.2 சார் பதிவகம், திருநெல்வேலி தாலுக்கா, கண்டியபேரி கிராமம், அயன் நஞ்சை சர்வே எண்110/1-ல் 2.27 ஏக்கர் பரப்பளவில் தென் பகுதியில் 68 சென்ட் தற்போதைய T.S. வார்டு 9, பிளாக் 16, T.S.எண்.2586/4 பகுதியில் 68 சென்ட் பரப்பளவில் 34 சென்ட் நிலம் கீழ்பகுதியில் இருந்து மேல் பகுதி வரை நான்கு பகுதியாகக்கப்பட்டு 16 & 2 பகுதிகளின் 12 சென்டில் 5 சென்ட் போக மீதமுள்ள 7 சென்ட் முழுவதும் **நான்கு எல்லைகள் : வடக்கில் :** S. ரவிச்சந்திரன் நிலம் T.S.எண்.2586/3, **கிழக்கில் :** திருமாணிக்கம்மாள் நிலம் T.S.எண்.2590, **தெற்கில் :** T.S.எண்.2586/4 கீழ்மேல் கால்வாய் மற்றும் ரோடு, **மேற்கில் :** S. ரவிச்சந்திரன் T.S.எண்.2586/4.

ஐட்டம் எண்.5 - திரு.S.ரவிச்சந்திரன் அவர்களுக்கு சொந்தமான அசையா சொத்து

திருநெல்வேலி பதிவு மாவட்டம், திருநெல்வேலி இணை எண்.1 சார்பதிவாளர் அலுவலகம், திருநெல்வேலி தாலுக்கா, S.எண்.110, T.S.எண்.2586/4 பகுதி கண்டியபேரி கிராமம், T.S. வார்டு எண்.9, பிளாக் எண்.16, திருநெல்வேலி தாலுக்கா, திருநெல்வேலி பதிவு மாவட்டம், இதற்கு உட்பட்ட 19 சென்ட் பரப்பளவு நிலம் **நான்கு எல்லைகள் : வடக்கில் :** T.S.எண்.2586/3 வாய்க்கால், **தெற்கில் :** அனுப் ப்யூஸ் மற்றும் S.K.கடை உரிமையாளர் நிலம் T.S.எண்.2586/4, **கிழக்கில் :** பிரசான வாய்க்கால் & சிவானு நிலம் T.S.எண்.2591, **மேற்கில் :** முத்துக்கிருஷ்ணன் & மற்றவர்களின் நிலம் T.S.எண்.2586/4.

ஐட்டம் எண்.6 - திரு.S.ரவிச்சந்திரன் அவர்களுக்கு சொந்தமான அசையா சொத்து

அ) திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி பதிவு மாவட்டம், திருநெல்வேலி இணை எண்.1 சார் பதிவாளர் சரகம், திருநெல்வேலி டவுன், ஆசாத் ரஸ்தா @ குற்றால ரோடு, வடபுறத்தில் T.S. வார்டு 9, பிளாக் 16, T.S.எண்.2590/2-ல் 82 சென்ட், இதில் 28 சென்ட் பரப்பளவில் ஹஜிரா பிவிக்கு விற்கப்பட்ட 15 சென்ட் போக மீதமுள்ள 13 சென்ட் பரப்பளவின் அளவீடு கீழ்மேல் வடபுறம் 145 (76 + 51 + 18) அடி, தென்புறம் 151 (88 + 63) அடி மற்றும் தென் வடல் மேல்புறம் 27 அடி, கீழ்புறம் 15 அடி ஆக மொத்தம் 2180 சதுர அடி (202.672 சதுர மீட்டர்) - 5 சென்ட் பரப்பளவு நிலம் **நான்கு எல்லைகள் :** T.S.எண்.2590/2 பகுதி ஹஜிரா பபியா நிலம் மற்றும் ஐட்டம் 2 நிலம், **கிழக்கில் :** S. ரவிச்சந்திரன் அவர்களால் வாங்கப்பட்ட நிலம், T.S.எண்.2590/2 பகுதி, **தெற்கில் :** கீழ்மேல் நீரப்பாசன கால்வாய், T.S.எண்.2591/1A & 2591/1B நிலம், **மேற்கில் :** T.S. எண்.2586/1 பகுதி நிலம் **ஆ)** திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி பதிவு மாவட்டம், திருநெல்வேலி இணை எண்.1 சார் பதிவாளர் சரகம், திருநெல்வேலி டவுன், ஆசாத் ரஸ்தா @ குற்றால ரோடு, வடபுறத்தில் T.S. வார்டு 9, பிளாக் 16, T.S.எண்.2590/2 பகுதி நிலம் அளவீடு கீழ்மேல் வடபுறம் 35 அடி, தென் புறம் 18 அடி மற்றும் தென்வடல் மேல்புறம் 137 அடி, கீழ்புறம் 152 அடி ஆக மொத்தம் 3534 சதுரடி (328.56 சதுர மீட்டர்) - 8.11 சென்ட் பரப்பளவு நிலம் **நான்கு எல்லைகள் :** T.S.எண்.2589/1C நிலம், **கிழக்கில் :** T.S.எண்.2590/2 பகுதி நிலம் மற்றும் S. ரவிச்சந்திரன் நிலம், **தெற்கில் :** ஐட்டம் 1 T.S.எண்.2590/2 பகுதி, **மேற்கில் :** அஜீரா ஷபியா நிலம் T.S.எண்.2590/2 பகுதி. ஐட்டம் 1 & 2 -ன் மொத்த பரப்பளவு 5714 சதுரடி (531.23 சதுர மீட்டர்) - 13.11 சென்ட்.

ஐட்டம் எண்.7 - திரு.S.ரவிச்சந்திரன் அவர்களுக்கு சொந்தமான அசையா சொத்து

திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி தாலுக்கா, திருநெல்வேலி மாநகராட்சி, T.S.எண்.2590/2, பிளாக் எண்16, T. S., வார்டு C, எண்16, இதற்கு உட்பட்ட 16.00 சென்ட் பரப்பளவு நிலம் **நான்கு எல்லைகள் : வடக்கில் :** T.S.எண்.2589/1C நிலம் & 28 நிலம், R.S.எண்.134/1 நிலம், **தெற்கில் :** T.S.எண்.2591 அன்னம்மாள் செட்டியார் நிலம், **கிழக்கில் :** T. S. எண்.2590/2 ஜெயலட்சுமி நிலம், **மேற்கில் :** T.S.எண்.2590/2 ஆறுமுகம் நிலம்.

13 (2) SARFAESI சட்டம் 2002 -ன் படி கோரிக்கை அறிவிப்பு தேதி	
1. அஜெய் கபுயல்ஸ்	06.01.2024
2.அஜெய் மாடர்ன் ரைஸ் மில்	23.04.2024
3.அன்னத்தாய் ரைஸ் அண்ட் பேடி டிராடர்ஸ்	12.04.2024
13 (4) SARFAESI சட்டம் 2002 - ன் படி சுவாதீன அறிவிப்பு தேதி	
1.அஜெய் கபுயல்ஸ்	27.03.2024
2.அஜெய் மாடர்ன் ரைஸ் மில்	04.07.2024
3.அன்னத்தாய் ரைஸ் அண்ட் பேடி டிராடர்ஸ்	04.07.2024
சுவாதீன நிலை அடையாள / மெய்நிலை / ஆக்கப்பூர்வ	அடையாள

நிலுவைத் தொகை: 31.10.2026 அன்றுள்ளபடி ரூ.25,93,42,532.01 (ரூபாய் இருபத்தைந்து கோடி தொண்ணூற்று மூன்று லட்சத்து நாற்பத்து இரண்டாயிரத்து ஐநூற்று முப்பத்து இரண்டு மற்றும் பைசா ஒன்று மட்டும்) + 01.11.2026 முதல் எதிர்கால வட்டி மற்றும் இதர கட்டணங்கள் பிற செலவுகள் உட்பட.

குறைந்தபட்ச கேட்பு விலை : ரூ.4,97,70,000/-	முன் வைப்பு தொகை (EMD) : ரூ.49,77,000/-
மின் ஏலத் தேதி மற்றும் நேரம் **26.11.2026** (வியாழக்கிழமை)	காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை
முன் வைப்பு தொகை செலுத்த வேண்டிய கடைசி தேதி : மின் ஏலம் தொடக்கம் அல்லது அதற்கு முன்	
ஏல உயர்வுத் தொகை:	ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்)

வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கள் ஆவணங்கள் : 22.03.2012 தேதியிட்ட, ஆவண எண் 2441/2012-ன் வாயிலாக, 520 சதுர மீட்டர் பரப்பளவை HPCL நிறுவனத்திற்கு உட்பட்டகைக்கு (Sub Lease) வழங்கியது.

மின் ஏலத்தின் நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள்: விற்பனையானது கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002ல் பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பொறுத்து மற்றும் பின்வரும் கூடுதல் நிபந்தனைகளுக்கு உட்பட்டது 1) மேற்குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் **"உள்ள இடத்தில் உள்ளவாறு" "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எப்படி உள்ளதோ உள்ளவாறு"** என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். 2.) மேலே குறிப்பிட்டுள்ள அட்டவணை சொத்து விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் நன்கு தெரிந்த தகவல்களாகக் கூறப்பட்டுள்ளன, ஆனால் இந்த பிரகடனத்தில் எந்தவொரு பிழை, தவறான விளக்கம் அல்லது விடுபடுதலுக்கும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பொறுப்பேற்க மாட்டார். 3.) கீழ்கண்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் https://baanknet.com என்ற இணைய தளத்தில் மின் ஏல விற்பனை 26.11.2026 (வியாழக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெறும். மின் ஏல விற்பனை மற்றும் நிபந்தனைகளை இணையதளமான https://baanknet.com பார்க்கவும்.

தேதி : 04.11.2026   அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பஞ்சாப் நேஷனல் வங்கி,
இடம் : திருச்சி   (கடன் வழங்கியவர்)

SARFAESI சட்டம், 2002-இன் விதி 8(6)-இன் கீழ் சட்டப்பூர்வ விற்பனை அறிவிப்பு

நாகர்கோவில் மாநகராட்சி

பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ந.க.எண்.26072/2017/அ8

நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்டுள்ள **2026 -2027-**ஆம் ஆண்டிற்கான கீழ்காணும் உரிமத்திற்கு நாள் வாடகை அடிப்படையில் மாநகராட்சியால் ஏற்படுத்தப்பட்டுள்ள பொது மற்றும் சிறப்பு ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு மாநகராட்சி ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் **18.11.2026**–ஆம் தேதி புதன்கிழமை அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற உள்ளது. அன்றைய தினம் காலை **11.00** மணி வரையில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நேரில் வரவேற்கப்படுகின்றன. அன்றைய தினம் காலை **11.30** மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் ஆணையரால் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் பகிரங்கமாக பொது ஏலம் விடப்படும்.

மேற்படி உரிம இனம் ஏலம் போகாமல் இருந்தால் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொடர்ச்சியாக பிரதி வாரம் புதன்கிழமைகளில் நடைபெறும். ஏலம் குறித்த சந்தேகங்களை அலுவலக வேலை நாட்களில் நேரில் அலுவலகத்தில் வருவாய்பிரிவில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

வ. எண்	குத்தகை ஏல உரிமை விபரம்	கால அளவு (ஒப்படைக்கும் நாள் முதல்)	ஏலம் பொறுப்புத் தொகை ரூ	கூடுதல் வைப்புத் தொகை ரூ
(1)	(2)	(3)	(4)	(5)
1	மாநகராட்சிக்கு சொந்தமான மகாராஜா ஸ்ரீஅவிட்டம் திருநாள் நினைவு மாநகராட்சி காப்பக மைதானத்தில் நில வாடகை அடிப்படையில் பொருட்காட்சி நிகழ்ச்சி நடத்திட முன்னதாக மைதானத்தில் அமைக்கப்படும் நாட்கள், மற்றும் அவைகள் அனைத்தும் முழுமையாக மைதானத்தில் இருந்து அகற்றப்படும் நாட்கள் வரை குறிப்பிட்டு உரிமம் கோரிடவும்.	**24.12.2026** முதல் **26.01.2026** வரை	**5,00,000/-**	**அரசு மதிப்பு நாள் வாடகை ரூ.88,500/-**

குறிப்பு :

1. ஒரு இனத்திற்கு செலுத்தப்படும் வைப்புத் தொகையினை கொண்டு அந்த இனத்திற்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலத்திலும் கலந்து கொள்ளலாம்.
2. பொருட்காட்சி துவக்கப்படும் நாள் மற்றும் முடிவடையும் நாள் கூட்டவோ அல்லது குறைக்கவோ இயலும்.
3. ஏலம் குறித்த சந்தேகங்களை அலுவலக வேலை நாட்களில் வருவாய் பிரிவில் நேரில் அலுவலகத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம் அல்லது **8870733293, 7845625466, 9443281048** ஆகிய கைப்பேசி எண்களை தொடர்பு கொண்டு விபரங்களை தெரிந்து கொள்ளலாம்.

ஆணையர்

வெ.ஆ.எண்.243|செ.ம.தொ.அ|க.கு|நாள்:06.11.2026   நாகர்கோவில் மாநகராட்சி

சட்டப் படிப்புகளுக்கான வயது வரம்பை நீக்கிய பிசிஐ: மனு விசாரணையை முடித்துவைத்த உச்சநீதிமன்றம்

புது தில்லி, நவ. 6: மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு சட்டப் படிப்புகளுக்கு விண்ணப்பிப்பதற்கான வயதுவரம்பை நீக்கி விட்டதாக உச்சநீதிமன்றத்தில் பார் கவுன்சில் ஆஃப் இந்தியா (பிசிஐ) தெரிவித்துள்ளது.

ஐந்தாண்டு எல்எல்பி சட்டப் படிப்புக்கு விண்ணப்பிப்பதற்கு அதிகபட்ச வரம்பாக 22 வயதையும், மூன்றாண்டு பி.எல். சட்டப்படிப்புக்கு 45 வயதையும் நிர்ணயித்து இந்திய வழக்குரைஞர்கள் சங்கமான பார் கவுன்சில் ஆஃப் இந்தியா கடந்த 2016–ஆம் ஆண்டு அறிவிப்பு வெளியிட்டது. சட்டப் படிப்புகளுக்கு விண்ணப்பிக்க பொது பிரிவினருக்கு 20 வயதையும், எஸ்சி, எஸ்டி பிரிவினருக்கு 22 வயதையும் நிர்ணயித்து அந்த அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது.

இதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம் பார் கவுன்சிலின் முடிவுக்கு கடந்த 2017–ஆம் ஆண்டு மார்ச் மாதம் இடைக்காலத் தடை விதித்தது.

பார் கவுன்சிலின் முடிவை எதிர்த்து ரிஷப் தக்கல் என்பவர் தொடர்ந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்து நடந்து வந்தது. இந்த வழக்கை தலைமை நீதிபதி சூர்யகாந்த் மற்றும் நீதிபதிகள் ஜாய்மால்ய பாக்சி, வி.மோகனா ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்து வருகிறது. இந்நிலையில், மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு சட்டப் படிப்புகளுக்கு விண்ணப்பிப்பதற்கான வயதுவரம்பை நீக்கி விட்டதாக பார் கவுன்சிலின் வழக்குரைஞரான ராதிகா கௌதம், உச்சநீதிமன்றத்தில் வெள்ளிக்கிழமை தெரிவித்தார். இதையடுத்து இந்த மனு மீதான விசாரணையை உச்சநீதிமன்றம் முடித்து வைத்தது.

முன்னதாக, ஐந்தாண்டு மற்றும் மூன்றாண்டு சட்டப் படிப்புகளுக்கு விண்ணப்பிப்பதற்கான வயதுவரம்பை திரும்பப்பெறும் விவகாரத்தில் தனது நிலையைத் தெளிவுபடுத்துமாறு பார் கவுன்சிலுக்கு உச்சநீதிமன்றம் கடந்த செப்டம்பர் 25–ஆம் தேதி உத்தரவிட்டிருந்தது.

தடையற்ற சுங்கக் கட்டண வசூல்: என்ஹெச்ஏஐ வழிகாட்டுதல் வெளியீடு

புது தில்லி, நவ. 6: நான்குவழி மற்றும் அதற்கு மேற்பட்ட வழிகள் கொண்ட தேசிய நெடுஞ்சாலைகளில் தடைகள் இல்லாத, தொழில்நுட்ப அடிப்படையிலான, எளிமையான சுங்கக் கட்டண வசூல் முறையின் (பன்முக வழித்தட தடையற்ற போக்குவரத்து) வடிவமைப்பு மற்றும் உள்கட்டமைப்புக்கான வழிகாட்டுதல்களை இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் (என்ஹெச்ஏஐ) வெளியிட்டுள்ளது.

சுங்கச் சாவடிகளில் வாகனங்கள் நிறுத்தப்பட தேவையின்றி, பன்முக வழித்தட தடையற்ற போக்குவரத்து (எம்எல்எஃப்எஃப்) அடிப்படையிலான சுங்கக் கட்டண வசூலை ஆதரிக்கும் வகையில், தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை இந்த வழிகாட்டுதல்கள் உறுதி செய்யும் என்று என்ஹெச்ஏஐ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'சுங்கச் சாவடிகளில் போக்குவரத்து நெரிசல், காத்திருப்பு நேரம் மற்றும் எரிபொருள் பயன்பாட்டை குறைப்பதுடன், தேசிய நெடுஞ்சாலைப் பயணங்களை பாதுகாப்பானதாகவும், இடையூறுகளற்றதாகவும் மாற்றும் நோக்கில் இந்த முன்னெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, சுங்கச்சாவடி தள அமைப்புகள், வழித்தட அமைப்புகள், அறிவிப்பு பலகைகள், சாலை உள்கட்டமைப்பு, மின் விளக்குகள், அடையாளப் பலகைகள், சாலை பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் துணை வசதிகளுக்கான சீரான தேவைகள் குறித்து விரிவாக பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டுதல்கள், தற்போதைய மற்றும் எதிர்கால தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களுக்கு பொருந்தும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.